5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இப்பரீட்சையின் மூலம் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டும்.

6. **தகைமைகள்**:- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்துக்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையவையாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2007.06.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.06.30 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்).

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் <u>**ஒரே தடவையில்** ஆறு</u> (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

2. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) அனைத்துப் பாடங்களிலும் <u>**ஒரே தடவையில்**</u> சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு -

i. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்), பரீட்சையில் திறமைச் சித்தி பெற வேண்டியுள்ள மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரி இப் போட்டிப் பரீட்சைக்காக தோற்றும் மொழி ஊடகமாகும்.

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு சமனான வேறு, தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோன்றி நியமனம் பெறுவதற்கான தகைமையினை வழங்குவதற்கான உரித்தாக்கல் தொடர்பில் இறுதித் தீர்மானம் உரிய கல்வி நிறுவனங்களின் மற்றும் பரீட்சை ஆணையாளரினால் உறுதிப்படுத்தியதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

**கவனத்திற்கு - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2025, யூன் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.**

7. மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்.

மாவட்டப் பெயர்ப் பட்டியல், அட்டவணை - I இல் காட்டப்பட்டுள்ளது. வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்குத் தெரிவுசெய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அட்டவணை - I இற்கு இணங்க நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் குறிப்பிட்டதொரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்ப வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அம்மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே போட்டியிட முடியும்.

I. ஏதேனும் மாவட்டமொன்றுக்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள; தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை அருகிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மத்தியில் அந்த மாவட்டங்களின் சனத்தொகை விகிதா சாரத்தின் அடிப்படையில் மீளப் பகிரப்படும்.

II. நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறிதளவாக இருப்பின், அக்காரணத்தின் அடிப்படையில் மாவட்ட சனத்தொகையை அடிப்படையாகக் கொள்ள முடியாத விடத்து, திறமை ஒழுங்கில் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுபர்.

III. பரீட்சையில் தேவையான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெறும் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்குமிடத்து மாவட்ட சனத்தொகையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படமாட்டாது.

**கவனிக்க - மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பதன் பொருள், அவ் நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகைக்கு விகிதாசாரமாக அம் மாவட்டத்தில் போட்டிப் பரீட்சைக்கு தோன்றும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படும் வெற்றிடங்களின் அளவு என்பதுடன், அவ் நிர்வாக மாவட்டத்திற்குள் நிலவும் அரசாங்க தாபனங்களில் காணப்படும் சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கையல்லவென கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.**

(ஆ) மாவட்டத்தைச் சேர்ந்தவராக கருதப்படுவதற்குக் காணப்பட வேண்டிய தகைமைகள் - மாவட்டமொன்றின் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

I. விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்;

அல்லது

II. பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் அந்த மாவட்டத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்;

அல்லது

III. அவர் தொடர்ச்சியாக 05 வருடங்கள் அந்த மாவட்டத்தில் தனது பாடசாலை இடைநிலைக் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு -

1. எழுத்துப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்குறித்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் பின்வரும் ஆவணங்களை உரிய விதத்தில் சமர்ப்பிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான வதிவை உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்புப் பெயர்ப் பட்டியல்
III. மாணவர் செயலாற்றுகைப் படிவம்

2. எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் இடமாற்றம் செய்யப்பட முடியுமான அரச சேவையை வகிப்பார்களாயின் அந்த விண்ணப்பதாரி தனது தந்தையின் அல்லது தாயின் பிறந்த இடத்தை தனக்குரிய மாவட்டமாகத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரர் தனது பெற்றோரின் பிறந்த இடத்தையும் அரச, மாகாண அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் சேவையாற்றுவதையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை நேர்முகப்பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிப்பது அவசியமாகும்.)

3. எந்தவொரு விண்ணப்பதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் பதவி வெற்றிடங்களுக்காகப் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. நிகழ்நிலை விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது மேற்படி 07(ஆ) குறிப்பிடப்படும் தகைமைகளின்படி தாம் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு மாவட்டத்தினை தெரிவு செய்ததன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

8. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீனமுடைய ஆட்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமைபெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களில் அதிக கூடிய புள்ளி மட்டத்திலுள்ள 3% மாத்திரம் திறமை ஒழுங்குவரிசைபடி நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர். அதற்காக தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் நூற்றுக்கு நாற்பது வீதம் புள்ளிகளையாவது (40%) பரீட்சாத்திகள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், பரீட்சையின் மொத்த புள்ளிகளில் நூற்றிற்கு ஐம்பது வீதமானவது (50%) பெறுதல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன்படி அங்கவீனமுடைய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

குறிப்பு – நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது குறித்த வகையில் தமது அங்கவீன புனர்வாழ்வு நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிட வேண்டும் என்பதுடன் **அங்கவீனர் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என்று குறிப்பிடக் கூடாது.**

9. **பரீட்சை நடைமுறை:-**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் பரீட்சைக்குரிய அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 01 | மொழியாற்றல் | 100 | 2 ½ மணித்தியாலங்கள் |
| 02 | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

(1) மொழியாற்றல்: பரீட்சார்த்திகளின் கருத்துக்களை வெளியிடுதல், கிரகித்தல், எழுத்துக்களின் பிரயோகம், மொழியும் மற்றும் கட்டுரையும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படி யைத் தயாரித்தல், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியை சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) உளச்சார்பு: இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கணக்குத்திறன், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு போன்றவற்றை அளவிடும் விதத்தில் கேள்விகளைக் கொண்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வகையிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

குறிப்பு: கடமை நோக்கங்களுக்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கக் கூடிய வகையில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சையில் தகைமை பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதமேனும் (40%) பெற வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஐம்பது வீதமேனும் (50%) பெற வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பெற்ற புள்ளிகளின் ஒழுங்குவரிசை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(இ) பரீட்சையின் பெறுபேறுகள் - விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத் தளத்தினூடாக அறிவிக்கப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள் –**

i. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாகவும், சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

ii. விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தினை மறைத்துள்ளார் என பின்னர் தெரியவரும் போது அவருக்கு தொடர்ந்தும் நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாதது என்பதுடன் இப் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையிலிருந்து அவரை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்

11. **பரீட்சை நிபந்தனைகள்**

(i) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். சிங்களம் அல்லது தமிழில் பூர்த்தி செய்ய ஆலோசனை வழங்கியுள்ள பகுதிகளை மட்டும் சரியாக அவ் மொழிகளில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிரறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும்.. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுபடியான பிரதியொன்றாக இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை கட்டமைப்பினூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டண செலுத்துகை முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவினை செய்தல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)
ii. எந்தவொரு வங்கியினதும் வரவட்டை மூலம் (Any Bank Debit Cards)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம் (Bank of Ceylon Online Banking Method)
iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு : மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சை கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள

விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சை கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பாகாது.

(iv) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்த/ வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

(v) விண்ணப்பதாரிகள், விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இறுதி திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்குஅனுமதிப்பத்திரம்வெளியிடப்பட்டஉடன்அதனைகுறிப்பிட்டுஅறிவித்தலொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடாக அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்பு தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைஒழுங்கமைப்புக்கிளையினூடாகவிசாரித்தல்வேண்டும்அவ்வாறுவிசாரிக்கும்போதுவிண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின், அத் தகவல்களுடன் தொலைநகலினூடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை விரைவாக பெறுவதற்கு இயலுமான வகையில் விண்ணப்பதாரரின் தொலைநகல் எண்ணையும் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் எண்ணிற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமானது.

(viii) அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற்றங்கள் ஏதும் இருப்பின் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தை அழைத்து விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ற வகையில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ix) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால், ஏனைய விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தரினால், பிரிவின் கிராம உத்தியோகத்தரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையையுடைய ஒருவரினால் சான்றுரைப்படுத்தப்படல் வேண்டும்.

(x) பரீட்சை நடத்தல் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகுதல் வேண்டும். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பரீட்சார்த்திக்கெதிராக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திக்கு ஆளாகவேண்டி ஏற்படும்.

12. **பரீட்சைக்கு உள்வாங்குதல்**

(அ) பரீட்சைக்கு தோன்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குக் தோற்றும் நாளில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சாத்தியொருவர் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சாத்திகளும் பின்பற்ற வேண்டிய சட்டக்கோவையொன்று இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பு : விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சகல தகமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படக்கூடாது

13. **பரீட்சார்த்திகளின் அடையாளம்**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இருகாதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

15. இதன் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின், அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுள்ளதாகவிருக்கும்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2025 மே மாதம் 20.

**அட்டவணை - I**

**மாவட்டங்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் இலக்கங்கள்**

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கம்பஹா | 2 |
| களுத்துறை | 3 |
| மாத்தளை | 4 |
| கண்டி | 5 |
| நுவரெலியா | 6 |
| காலி | 7 |
| மாத்தறை | 8 |
| அம்பாந்தோட்டை | 9 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலனறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

## அட்டவணை - II

### பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | | மருதானை | 02 |
| | | பொரளை | 03 |
| | | கறுவாத் தோட்டம் | 04 |
| | | பம்பலப்பிட்டி | 05 |
| | | ஹெவ்லொக் டவுன் | 06 |
| | | நுகேகொடை | 07 |
| | | மொரட்டுவை | 08 |
| | | பிலியந்தலை | 09 |
| | | ஹோமாகமை | 10 |
| | | மகரகமை | 11 |
| | | ஹங்வல்லை | 12 |
| | | அவிசாவளை | 13 |
| 02 | கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | | மினுவாங்கொடை | 15 |
| | | திவுலப்பிட்டி | 16 |
| | | வியாங்கொடை | 17 |
| | | கம்பஹா | 18 |
| | | ஜா-எலை | 19 |
| | | வத்தளை | 20 |
| | | களனி | 21 |
| | | தொம்பே | 22 |
| 03 | களுத்துறை | ஹொரணை | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மத்துகமை | 26 |
| | | அளுத்கமை | 27 |
| 04 | மாத்தளை | மாத்தளை | 28 |
| | | கலேவளை | 29 |
| | | நாஉலை | 30 |
| | | லக்கலை - பல்லேகமை | 31 |
| 05 | கண்டி | கண்டி | 32 |
| | | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | | தெல்தெனிய | 34 |
| | | வத்தேகமை | 35 |
| | | நுகவெலை | 36 |
| | | கலகெதரை | 37 |
| | | கம்பளை | 38 |
| 06 | நுவரெலியா | ஹெந்துனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வதுமுல்லை | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்ஹேனை | 43 |
| 07 | காலி | அம்பலாங்கொடை | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகமை | 46 |

**அட்டவணை - II** ***(தொடர்ச்சி)***

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 08 | மாத்தறை | வெலிகமை | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுப்பிட்டி | 49 |
| | | ஹக்மனை | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்குவல்லை | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 09 | அம்பாந்தோட்டை | பெலியத்தை | 55 |
| | | வலஸ்முல்லை | 56 |
| | | வீரக்கெட்டிய | 57 |
| | | தங்காலை | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸகமஹாராமை | 61 |
| 10 | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11 | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13 | வவுனியா | வவுனியா | 69 |
| 14 | திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | | திருகோணமலை | 71 |
| | | மூதூர் | 72 |
| | | பதவி பராக்கிரமபுரம் | 73 |
| | | கிண்ணியா | 74 |
| 15 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | | ஏறாவூர் | 76 |
| | | காத்தான்குடி | 77 |
| 16 | அம்பாறை | அம்பாறை | 78 |
| | | சேரங்கடை | 79 |
| | | கல்முனை | 80 |
| | | அக்கரைப்பற்று | 81 |
| | | சம்மாந்துறை | 82 |
| 17 | புத்தளம் | வென்னப்புவை | 83 |
| | | மாதம்பை | 84 |
| | | சிலாபம் | 85 |
| | | புத்தளம் | 86 |
| 18 | குருநாகல் | குளியாப்பிட்டி | 87 |
| | | பிங்கிரிய | 88 |
| | | நாரம்மலை | 89 |
| | | பொல்கஹவலை | 90 |
| | | குருநாகல் | 91 |
| | | இப்பாகமுவை | 92 |
| | | தொடங்கஸ்லந்தை | 93 |
| | | மொரதிஹ | 94 |
| | | நிகவரட்டிய | 95 |
| | | மாஹோ | 96 |

அட்டவணை - II *(தொடர்ச்சி)*

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 19 | அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | | கெக்கிராவை | 98 |
| | | அநுராதபுரம் | 99 |
| | | கலென்பிந்துனுவெவ | 100 |
| | | கஹடகஸ்திகிலிய | 101 |
| 20 | பொலனறுவை | பொலனறுவை | 102 |
| | | ஹிங்குரக்கொடை | 103 |
| 21 | பதுளை | பண்டாரவளை | 104 |
| | | வெளிமடை | 105 |
| | | பதுளை | 106 |
| | | பஸ்ஸரை | 107 |
| | | மஹியங்கனை | 108 |
| | | கிராந்துருகோட்டை | 109 |
| | | ஹஸலக | 110 |
| 22 | மொனராகலை | பிபிளை | 111 |
| | | மொனராகலை | 112 |
| | | வெல்லவாய | 113 |
| 23 | கேகாலை | கேகாலை | 114 |
| | | ரம்புக்கனை | 115 |
| | | மாவனல்லை | 116 |
| | | ருவான்வல்லை | 117 |
| 24 | இரத்தினபுரி | எஹலியகொடை | 118 |
| | | இரத்தினபுரி | 119 |
| | | பல்மடுல்லை | 120 |
| | | பலங்கொடை | 121 |
| | | கலவானை | 122 |
| | | அம்பிலிப்பிட்டி | 123 |
| 25 | கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | | பளை | 125 |

---

05-183

**விவசாயத் திணைக்களம்**

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை (NVQ 5) பயில்வதற்காக இலங்கை விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

**Open competitive Examination for the enrollment of students for the National Diploma in Agricultural Production Technology (NVQ 5) in Sri Lanka School of Agriculture - 2025**

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இலங்கை விவசாயப் பாடசாலைகளில் நடைபெறும் “விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2026 / 2027 ஆம் கல்வியாண்டுக்கு மாணவர் சேர்க்கைக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் கோரப்படுகின்றது. இப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சை பிரிவினால் 2025, ஒற்றோபர் மாதத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**02. விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறி**

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ 5) மட்டம் 5 வழங்கப்படுகின்றது.

2.2 இக் கற்கைநெறியானது விவசாயத் திணைக்களத்தின் அநுராதபுரம், பிபிலை, லபுதுவை, பாலமுனை, பரந்தன், வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான கற்கைநெறியாக மேற்கொள்ளப்படுகின்றது.

2.3 இக்கற்கை நெறிக்கான காலம் 1 ½ வருடங்களாகும். இதில் ஒரு வருடம் விவசாயப் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கப்படும். மேலும் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 06 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றினை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2.4 ஆங்கில மொழியில் மட்டும் நடத்தப்படும் இக்கற்கை நெறியானது முழு நேர உள்ளகக் கற்கைநெறியாகும்.

2.5 மாணவர் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கை நெறியினை பயில்வதற்கு தகைமை பெற்றவர்களின் தகைமைகளின் உண்மைநிலையானது நேர்முகப் பரீட்சை மூலம் பரீட்சிக்கப்பட்டதன் பின்பே விவசாயப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

2.6 இக்கற்கை நெறிக்கு க.பொ.த(உயர் தர) தகைமையின் அடிப்படையிலும் மற்றும் விவசாயத் துறையில் தேசிய தொழிற் தகைமை நிலை 04 (NVQ level 04) கற்கை நெறியினை பயின்று பெற்றுக் கொண்ட தகைமையின் அடிப்படையிலும் விண்ணப்பிக்கலாம்.

**03. கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 க.பொ.த (உயர் தர) தகைமையின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு,-

3.1.1 **கல்வித் தகைமைகள்**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் பௌதீகவியல் / விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஆகக்குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகியவற்றில் மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம் -** க.பொ.த உயர் தர பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3.1.2 **வயது**

விண்ணப்பதாரிகள் 2025.06.30 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2007.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 2000.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.2 விவசாயத் துறையில் தேசிய தொழில் சார் தகைமை மட்டம் 4 (NVQ Level 4) பாடநெறி ஒன்றினை பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு

3.2.1 **கல்வித் தகைமைகள்:**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ 4) இல் கீழே தரப்பட்டுள்ள பாடநெறியொன்றை பயின்று மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ 4) சான்றிதழினை பெற்றிருத்தல்

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
- நில அலங்கார வினைஞர்
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்,

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்பான விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை 04 (NVQ 4) இல் வேறு ஏதேனும் பாடநெறி ஒன்று.

3.2.2 **வயது:**

விண்ணப்பதாரிகள் 2025.06.30 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2007.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1990.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது. எனவே இக்கற்கைநெறியினை கற்பதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். கற்கை நெறியில் சேரும் தருணத்தில் கர்ப்பமாக இருந்தால் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கும் கற்கை நெறியில் சேர்ந்த பின்னர் கர்ப்பமாவது கற்கை நெறியில் இருந்து விலக்குவதற்கும் காரணமாக அமையும்.

(இக்கற்கை நெறிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் உடல் மற்றும் உளரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அரச வைத்தியர் ஒருவரிடம் பெற்றுக் கொண்ட வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.)

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடைவராகமாட்டார்கள்.

3.5 அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

04. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் மொழி:**

4.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டும் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

4.2 போட்டிப் பரீட்சை கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 2025 ஒற்றோபர் மாதத்தில் நடத்தப்படும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் பரீட்சைக்கு

தோற்றுவதற்கு விருப்பமுடைய நகரம் மற்றும் அதற்குரிய இலக்கத்தினை குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

| *நகர இல.* | *நகரம்* |
|---|---|
| 1 | அம்பாறை |
| 2 | அனுராதபுரம் |
| 3 | தம்புள்ளை |
| 4 | கம்பஹா |
| 5 | காலி |
| 6 | ஹம்பாந்தோட்டை |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | வவுனியா |

4.3 குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றிக்கு போதியளவு எண்ணிக்கையான பரீட்சாத்திகள் விண்ணப்பிக்காதவிடத்து அல்லது வேறு ஏதேனும் செயன்முறை பிரச்சினைகள் ஏற்படுமாயின் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ள பரீட்சை நிலையத்திற்கு பதிலாக வேறு ஒரு பரீட்சை நிலையம் விவசாயத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும்.

5. **விண்ணப்பப்படிவங்கள் கோரல் :**

5.1 இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் நிகழ்நிலை (online) முறை மூலம் மேற்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

5.2 பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1300.00 ஆகும். மக்கள் வங்கி பேராதனை கிளையில் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 057100139027201 கொண்ட வருமானக் கணக்கிற்கு பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றுச் சீட்டு வழங்கப்பட்ட திகதி, கிளை மற்றும் இலக்கம் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

5.3 விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தொடர்பான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 081–2388340 அல்லது 081– 2388341 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்.

5.4 பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கவோ, வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றி அளிக்கவோ முடியாது.

5.5 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2025.06.30 திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் விண்ணப்பப்படிவம் இணையத் தளத்திலிருந்து அகற்றப்படும்.

5.6 நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தின் கடின நகல் (Hard copy) பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

5.7 இன் கடின நகல் (Hard copy) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளுடன் கட்டாயமாக பதிவுத் தபாலில் 2025.07.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (விரிவாக்கற் பயிற்சி) விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “தேசிய டிப்ளோமா கற்கை நெறி (NVQ-5) என குறிப்பிட வேண்டும்.

**இணைப்பு :**

அ. க.பொ.த (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலான விண்ணப்பதாரிகளுக்கு

- i. க.பொ.த (சாதாரண) பரீட்சை சான்றிதழின் பிரதி
- ii. க.பொ.த (உயர்தர) பரீட்சை சான்றிதழின் பிரதி
- iii. பிறப்புச் சான்றிதழின் பிரதி
- iv. தேசிய அடையாள அட்டை பிரதி
- v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

ஆ. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) பாடநெறியினை நிறைவு செய்து விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு சான்றிதழ் பெற்றவர்கள்

i. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ்
ii. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழ்
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய அடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிரமாதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களம் பொறுபேற்காது.

5.8 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல இணைப்புக்களினதும் கடின நகல் பிரதியானது விவசாயத் திணைக்களத்திற்கு கிடைக்காவிடின் பரீட்சை எழுதுவதற்கான தகுதியை இழந்ததாகக் கருதப்படும். எனவே குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய சீட்டு ஆகியவற்றின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும்.

6. **அடையாளத்தை உறுதி செய்தல்**

6.1 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் அவர்கள் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிபடுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை மட்டும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

07. **பரீட்சை முறைமை**

7.1 போட்டிப் பரீட்சை விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை என்பன முறையே 01 மணித்தியாலம் என்ற வகையில் நடைபெறுவதுடன்இ ஒவ்வொரு விடயத்திற்கும் 100 மதிப்பெண்கள் என்ற வகையில் வழங்கப்பட்டு இறுதி மதிப்பெண்ணாக 200 இற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் அறிவிக்கப்படும்.

7.2 ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 30% மதிப்பெண்கள் பெற வேண்டும்.

7.3 **பாடவிதானம்**:

விவசாயம்: க.பொ.த (சாதாரண தரம்) விவசாயப் பாடத்திற்கமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விவேகப் பரீட்சை**

இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் 50 இனை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டின் கடின நகலை சரியான முறையில் இணைத்து, அத்துடன் 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய இணைப்புக்களையும் இணைத்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அது தொடர்பாக குறுஞ் செய்தி மூலம், விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவின் மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கான அனுமதி பத்திரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பான விபரங்களை 081-2388085 அல்லது 081-2388059 என்ற இலக்கம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

7.5 விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிகளான ஈமெயில் முகவரி, Whatsapp இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை ஆட்சேர்ப்பு

நடவடிக்கை நிறைவு பெறும்வரை மாற்றாமல் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். அந்த இலக்கங்களை மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

7.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஒருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால்,பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் உறுதிப்படுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.7 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.8 பரீட்சையினை நடாத்தல்இ பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்ட திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.9 போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் விவசாயத் திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும் இம்மதிப் பெண்களின் அடிப்படையில் மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமையும் மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு எதுவித மதிப்பெண்களும் வழங்கப்பட மாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7.10 பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.11 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**08. தெரிவு செய்யப்படும் முறை**

8.1 இப் பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 90% க.பொ.த (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலும் 10% தேசிய தொழிற் தகைமை 4 (NVQ Level 4) தகைமையின் அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

8.2 குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆண், பெண் விடுதிகளில் உள்ள இடவசதி மற்றும் அப்பாடசாலைகளில் கற்கை நெறிக்கான வசதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மதிப்பெண் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே மாறுப்படகூடும்.

8.3 யாரேனும் ஒரு விண்ணப்பதாரி இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்காக மேற்கொள்ளும் முறையற்ற செல்வாக்கு மற்றும் பிழையான செயற்பாடுகள் அவர் இப்பாடநெறியை தொடர்வதற்கு தகைமையற்றவராவதற்கு காரணமாக அமையும்.

8.4 விவசாயக் கல்லூரியில் பாடநெறியினை தொடருவதற்கான தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகள் விவசாயக் கல்லூரிகளுக்கு இணைத்து கொள்ளப்பட்ட பின்னர் அவர்களுக்கு விவசாயக் கல்லூரிகளை மாற்ற முடியாது.

8.5 இப்பாடநெறியானது முழுமையான தங்குமிட வசதியுடன் கூடிய பாடநெறி ஒன்றாகையால் இப்பாடநெறியினை கைவிட்டு செல்லும் எவருக்கும் மீண்டும் இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

8.6 பாடநெறிக்கு மாணவர்களை இணைத்து கொள்வது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

8.7 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திகதி: விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை .

05-193

---

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை**

**இலங்கை கொரியா தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தில், முழுநேர மற்றும் பகுதிநேர கற்கைநெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்தை, வெள்ளம்பிட்டி எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் இலங்கை கொரியா தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக்காக புதிய பயிலுநர்களைத் தற்போது ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றது.

கற்கைநெறி ஆரம்பம் - 2025 யூன்
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி - 2025, யூன் 14
தொலைபேசி இலக்கம் - 0112072850, 0710318720, 0779078190, 0711315005, 0713189401
மின்னஞ்சல் முகவரி - koreantech@vtasl.gov.lk
விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி - உதவிப்பணிப்பாளர், இலங்கை கொரியா

தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம்,
பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்தை,
வெள்ளம்பிட்டி.

முழுநேர கற்கைநெறிகள்

| *தொடர் இலக்கம்* | *கற்கை நெறி* | *முழுநேர பயிற்சிக் காலம் (தொழில்களுடன் கூடிய பயிற்சிக் காலத்துடன்)* |
|---|---|---|
| 01 | National Diploma in Automobile Technology<br>(மோட்டார் வாகன தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 02 | National Diploma in CNC Manufacturing Technology<br>(தயாரிப்பு தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா CNC - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 03 | National Diploma in Electrical Technology<br>(மின்சார தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |

| *தொடர் இலக்கம்* | *கற்கை நெறி* | *முழுநேர பயிற்சிக் காலம் (தொழில்களுடன் கூடிய பயிற்சிக் காலத்துடன்)* |
|---|---|---|
| 04 | National Diploma in Fluid Power Technology<br>(பாய்ம ஆற்றல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 05 | National Diploma in Electrical Technology<br>(மெகாட்ரொனிக்ஸ் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 06 | National Diploma in Welding Technology<br>(வெல்டிங் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 07 | National Diploma in Refrigeration & Air-conditioning Technology<br>(குளிர்சாதன மற்றும் வளி பதன தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா - NVQV) | 24 Months<br>24 மாதங்கள் |
| 08 | Automation and Robotiics Technology - (NVQ6)<br>(தானியங்கி மயமாக்கல் மற்றும் ரோபோ தொழில்நுட்பம் | 36 Months<br>36 மாதங்கள் |
| 09 | Electronic Technology (NVQ6)<br>இலத்திரனியல் தொழில்நுட்பம் | 36 Months<br>36 மாதங்கள் |
| 10 | National Certificate in Automobile Painter<br>மோட்டார் வாகனங்களில் வர்ணம் பூசுதலில் தேசிய சான்றிதழ் - (NVQ IV) | 12 Months<br>12 மாதங்கள் |
| 11 | National Certificate in Baker பேகர் தேசிய சான்றிதழ் - (NVQIV) | 12 Months<br>12 மாதங்கள் |
| 12 | Quick Service Restaurant (QSR) - (NVQ (IV) | 04 Months<br>04 மாதங்கள் |

முழுநேர கற்கைநெறிகளுக்கான ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் நடைபெறும்.

அனைத்து முழுநேர கற்கைநெறிகளுக்கும் திரும்பப் பெற இயலாத ரூபா 500.00 ஐ பரீட்சைக் கட்டணமாக செலுத்தி, அதன் பற்றுச்சீட்டை மாதிரி விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

பாடநெறிக் கட்டணம் - அனைத்து பாடநெறிகளுக்கும் பாடநெறி கட்டணம் அறவிடப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது).

**பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படவேண்டிய தகவல்கள் பின்வருமாறாகும்**

Account name - Vocational Training Authority of Sri Lanka
Account No. - 071100140004520
Bank/Branch - People’s Bank, Dematagoda

**பகுதி நேர கற்கைநெறிகள் :**

| *தொடர் இலக்கம்* | *கற்கை நெறி* | NVQ/Non | Duration |
|---|---|---|---|
| 01 | National Diploma in CNC Manufacturing Technology<br>(தயாரிப்பு தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - CNC) | NVQ V | 16 Months<br>16 மாதங்கள் |
| 02 | National Diploma in Electrical Technology<br>(மின்சார தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா) | NVQ V | 16 Months<br>16 மாதங்கள் |
| 03 | National Diploma in Mechatronic Technology<br>(மெகாட்ரொனிக்ஸ் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா) | NVQ V | 16 Months<br>16 மாதங்கள் |
| 04 | National Diploma in Refrigerator & Air-condition Technology<br>(குளிர்சாதன மற்றும் வளி பதன தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா) | NVQ V | 16 Months<br>16 மாதங்கள் |
07. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமானத்;திற்கு அமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளின் பொருட்டு உரித்தாகின்ற சகல சட்ட ஒழுங்குவிதிகளும் இப்பரீட்சைக்கும் பொருந்தும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்

08. விண்ணப்பங்கள் யாவும் 2025, யூன் 20 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கிழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த.பெ.இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

09. முதற்தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற விண்ணப்பகாரர்களிடம் இருந்து பரீட்சையின் பொருட்டு கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற உத்தியோகத்தர்கள் பரீட்சை கட்டணமாக ரூபா 600.00 செலுத்த வேண்டும். அந்த பரீட்சை கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் வருமானத்

தலைப்பு 2003-99-00 இற்கு வரவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொறு தபால்/உபதபால் பணிமனையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணபத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். எவ்விதக் காரணத்திற்காகவும் இக்கட்டணத்தை மீளப்பெற முடியாது.

10. பரீட்சைக் கட்டனம் செலுத்த வேண்டியவராயின் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகையை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்தை குறிப்பிட்டு விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றுதலுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

11. விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு திணைக்கள இணையதளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால்; வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பகாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சள் முகவரி என்பன குறிப்பிட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் தன்வசம் வைத்திருக்கும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டனம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட கடவுச் சீட்டு அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமேயாகும். விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பகாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தயோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பகாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பகாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

14. அவ்வாறே பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பகாரர் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கு இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் காதுகள் மறைக்கப்படாது பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பக்காரருக்கு மரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பக்காரரை அடையாளம் காண முடியுமாகின்ற வகையில் முகம் மற்றும் காதுகளை மறைக்கப்படாது இருத்தல் வேண்டும்;.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

கலாநிதி கே.ஏ.சீ.எச்.ஏ.கொத்தலாவல,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

2025.05.21.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025**

**The 3rd EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE – 2025**

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்)
(உதாரணம் HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
: ..........................................................................................................................

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDHANA H.M.S.K)
: ..........................................................................................................................

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................

02. தபால் முகவரி (அனுமதிப்பத்திரம் அனுப்புவதற்காக)
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
: ..........................................................................................................................
..........................................................................................................................
அலுவலக முகவரி : ..........................................................................................................

03. பால்
பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05 கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06. இதற்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றினீரா இல்லையா என்பதை குறிப்பிடுக. அவ்வாறாயின் ஆண்டு மற்றும் மாதம் என்பவற்றை குறிப்பிடுக. : ………………………………………………………………………………………

07. பிறந்த திகதி : வருடம் : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

08. பதவிப் பெயர் : ........................................................
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

09. திணைக்களத்தின் பெயர் : .........................................................
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

10. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :……………

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும், விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும் உறுதி மொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளுக்கு உரிய சகல ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டனம் ரூபா. ........................

பணம் செலுத்தப்பட்ட பணிமனை : ........................ பற்றுச் சீட்டு இலக்கம் : .................

| |
|---|
| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை வைத்துக் கொள்ளவும்) |

திகதி ................................................ .........................................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்

**............................................................................ ஊடாக**
**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ..................... இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/அலகில் .......... ......................... ஆக கடமை புரிவதுடன் அவரது விண்ணப்பம் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

இங்கு காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பக்காரர் உரிய பரீட்சைக் கட்டனத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : ..................................

.......................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

*(கையொப்பத்தை அத்தாட்ச்சிப்படுத்தல் - விண்ணப்பகாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/நகரசபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்).

05-224

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

## பல்கலைக்கழக முறைமையில் உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த (வெளிவாரியான பிரிவு) போட்டிப் பரீட்சை - 2025

உதவிச் செயலாளர்/உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர்/உதவி நிதிப் பொறுப்பாளர்/உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பரீட்சை, கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

1. 'செயலாளர்' என்பதிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளரைக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

2. உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூலப் பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும்.

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும்.

4. இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் முதலாவது வெள்ளிக் கிழமைக்கு பின்னர் வருகின்ற திங்கட் கிழமை முதல் மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு இணையவழி (Online) மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் ஆரம்பிக்கப்படும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025, யூன் 20 ஆம் திகதி ஆகுமென்பதோடு, குறித்த எழுத்துமூலப் பரீட்சையை 2025 ஆகஸ்ட் மாதம் நடாத்துவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

6. எழுத்து மூலப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பற்றிய விபரம் பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

7. எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளை விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட வகையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:

- இந்த எழுத்து மூலப் பரீட்சையுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு எந்தவொரு கடிதமோ தபாலில் தொலைந்துவிடல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்த விதமான முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

- இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதிப்பையும் விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்:**

ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள் - உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து முதல் தர அல்லது இரண்டாம் தர சித்தியுடன்கூடிய ஆரம்ப (இளமாணி) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) ஆரம்ப (இளமாணி) பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து நிர்வாகம் / முகாமைத்துவம் ** தொடர்பான முதுமாணிப் பட்டம் / பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது**: இருபத்து இரண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (2003.06.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.06.20 திகதியன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்)

**

- அரச / வணிக நிர்வாகம்
- முகாமைத்துவம்
- அரச கொள்கைகள்
- மனித வளங்கள் முகாமைத்துவம்
- பொருளியல்
- சட்டம்
- நிதி முகாமைத்துவம்
- கருத் திட்டங்களை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்
- தகவல் தொழில்நுட்பம் அல்லது
- முகாமைத்துவம் / நிர்வாகம் போன்ற பகுதிகளை குறிப்பிடத்தக்க அளவில் கொண்ட வேறு எந்தவொரு விடயத் துறையொன்று.

**தகைமைகள் - உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

1. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் II இறுதி பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

2. (அ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து கணக்கியல் தொடர்பான சிறப்பு ஆரம்ப (இளமாணி) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து ஆரம்ப (இளமாணி) பட்டத்துடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலை மட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் அல்லது அதன் முன்னைய நிறுவகமொன்றில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) அரச /அரச கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பாக இரண்டு (02) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயது** : இருபத்து இரண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (2003.06.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.06.20 திகதியன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்)

**தகைமைகள் பற்றிய வரையறைகள்:**

1. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய ஏதேனும் பதவிப் பிரிவுக்காக வெளிவாரி (திறந்த) பிரிவின் கீழ் அல்லது உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) பிரிவின் கீழ் இரண்டு (02) தடவைக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. (2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றிய தடவைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது).

2. எவரேனுமொரு உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) விண்ணப்பதாரியொருவர் ஏதேனுமொரு பதவிக்காக (உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதி நிர்வாகி / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்) வெளிவாரி (திறந்த) மற்றும் உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தகைமை பெறுவாராயின் அவர் உள்வாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் மற்றும் வெளிவாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் என நான்கு (04) தடவைகள் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவார். (2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றிய தடவைகள் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட மாட்டாது).

3. தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவி மத போதகருக்கும் ஆட்சேர்ப்புக்கான எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை :**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. ஒவ்வொரு பிரிவின் கீழான சகல விண்ணப்பதாரிகளும் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் குறிப்பிட்ட பிரிவுக்கான

   பாடப் பரப்புக்குட்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்:

| *பதவி* | *பாடப் பரப்பு* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடை வதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் | 1. நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்)<br>2. முகாமைத்துவத் திறன்கள்<br>3. ஆங்கில மொழி | 100<br>100<br>100 | 40<br>40<br>40 |
| உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 1. நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்)<br>2. ஆங்கில மொழி<br>3. கணக்கியல் மற்றும் நிதி | 100<br>100<br>100 | 40<br>40<br>40 |

2. எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிரூபிப்பதற்கு தேவையான எழுத்து மூலமான ஆவணங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்படும் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அனைத்து தகைமைகளையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியாகும்போது பெற்றிருத்தல் வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரி வழங்கப்பட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து

மூலமான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அவர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் நியமனத்திற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

3. எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40மூ அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற மற்றும் மேலே (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய மொத்தப் புள்ளிகளுக்கமைய வெற்றிடத்தைப் போன்று மூன்று மடங்கு விண்ணப்பதாரிகள் முதலில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

4. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது 40% புள்ளிகள் அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நியமனம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவதற்கான தகைமையைப் பெறுவார்கள்.

5. எழுத்து மூலப் பரீட்சையில் (7%) மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் (25%) புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

6. வெளிவாரி மற்றும் உள்வாரி பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

**பரீட்சை நடாத்தப்படும் மொழி:**

1. பரீட்சை மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். (சிங்களம்/தமிழ் /ஆங்கிலம்).

2. விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர ஏனைய அனைத்து வினாத்தாள்களுக்கும் விண்ணப்பப்பத்திரத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.

3. எக்காரணத்தினைக்கொண்டும் மொழி மூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை மற்றும் பரீட்சைக்கான நிபந்தனைகள்:**

1. இணையவழி (Online) விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி (Online) மூலம் அனுப்பப்படும் மென் பிரதியை (Soft Copy) செல்லுபடியாகும் விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக /ஏற்றுக்கொள்ளப்படவில்லை என இணையத்தள முறைமைக்குப் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றினூடாக (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி (Online) விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தும்போது அதிலுள்ள அறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்றவும். பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

   தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில், உயர் கல்வி நிறுவகங்களில், அரசாங்கத் திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றை தனது பெயர்வழிக் கோவையில் (Personal File) உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சகல விண்ணப்பதாரிகளும் தாம் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பதவிகளையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தை குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

4. பரீட்சைக் கட்டணம் 1200.00 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது இணையவழி முறைமையினூடாக வழங்கப்படும் கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்கள் செலுத்துதல் முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

- எந்தவொரு வங்கிக் கடனட்டை ஊடாக (Any Bank Credit Card)
- இணையப் பரிவர்த்தனை (பணம் செலுத்தல்) வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கிப் பற்றட்டை ஊடாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
- இலங்கை வங்கியின் இணைய வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
- எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை ஊடாக (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் ஊடாக பணத்தை செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளப் பக்கத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப ரீதியிலான அறிவுறுத்தல்கள் எனும் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) செலுத்திய பணம் கிடைக்கப்பெற்றமை பற்றி குறுஞ் செய்தியொன்றின் (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E-mail) செய்தியொன்றின் ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான மொத்தத் தொகையையும் செலுத்த வேண்டுமென்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட பணப் பரிவர்த்தனை (செலுத்தல்) முறைகள் ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) எவ்விதக் காரணத்தினாலும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ ஏனைய பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது.

5. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பத்திரம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை இணையவழியில் (Online) மாத்திரம் அனுப்புவார். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடனேயே இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிக் குறிப்பிட்டு அறிவித்தல் / குறுஞ் செய்தி (SMS) ஊடாக அறிவிக்கப்படும். தனக்குரிய அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்ற விபரங்களை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாக பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் பெக்ஸ் இலக்கமொன்றைக் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்புதல் பயன்மிக்கதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்வதற்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும்.

6. பொய்யான தகவல்களுக்கான தண்டனை:

விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களையே வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதாவது பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியொருவரின்

தகுதியின்மை தெரிய வந்தால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு விடயம் பொய்யானதென அறிந்திருந்தும் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவரும் பட்சத்தில் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்து வைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் பல்கலைக்கழக முறைமைச் சேவையிலிருந்து அந்த நபர் நீக்கப்படுவார்.

7. விண்ணப்பதாரிகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை நடைபெறும் தினத்தில் ஒப்படைத்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் பரீட்சை சட்ட ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

குறிப்பு :

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமையைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட மாட்டாது.

8. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:** விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும். அவரிடம் தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணிந்திருக்காதிருத்தலை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான பிரகாரம் இரண்டு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.

9. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுத்ததன் பின்னர் எழுத்து மூலப் பரீட்சையின் (75%) மற்றும் நேர்முகப் பரீட்சையின் (25%) புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் இறுதி முன்னுரிமைப் பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டவுடன் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள்/மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட குறிப்பொன்றை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்புவதற்கு அல்லது www.results. exams.gov.lk இணையத்தளத்தில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறைந்தது தகுதிகாண் காலத்தினுள் அவர் இணைத்துக்கொள்ளப்படும் உயர் கல்வி நிறுவகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் பணியாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவி மாதாந்தம் U-EX 1 (II), ரூ. 85,305 – 3x2,020 – 91,365 (EB) 93,765 - 12x 2,400 - ரூபா 122,565 எனும் ஒன்றிணைந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டிருக்கும்.

இது தவிர அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள படிகள் செலுத்தப்படும்.

**பணிக்கொடை:**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பணிக்கொடை செலுத்தப்படும்.

**சேமலாப நியதியம் மற்றும் ஓய்வூதிய அனுகூலங்கள்:**

ஊழியரால் சம்பளத்தின் (10%) இற்குச் சமமான தொகையும், தொழில் வழங்குனரால் சம்பளத்தின் (15%) இற்குச் சமமான தொகையும் வரவு வைக்கப்படுவதுடன், அதில் (8%) இனை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும், (7%) இனை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் தொழில் வழங்குனரால் வரவு வைக்கப்படும்.

**ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அனுகூலங்கள்:**

தொழில் வழங்குனரால் சம்பளத்தின் ( 03% ) இற்குச் சமமான தொகை வரவு வைக்கப்படும்.

**எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் மற்றும் வினாத்தாள்:**

உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி

| *வினாப் பத்திரம்* | *காலம்* | *விபரம்* |
|---|---|---|
| **வினாப் பத்திரம் 01**<br>நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 1 ½ மணித்தியாலம் | விண்ணப்பதாரிகளின் தர்க்க ரீதியிலான புரிதல் மற்றும் பகுப்பாய்வுத் திறன் மற்றும் அனுமானிக்கும் (ஊகிக்கும்) ஆற்றல் சம்பந்தமாக மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வினாப் பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| **வினாப் பத்திரம் 02**<br>முகாமைத்துவத் திறன்கள் | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்ப தாரிகளின் அறிவு பரிசோதிக்கப்படும்.<br>• முகாமைத்துவம் என்ற சிந்தனையின் வளர்ச்சிப் போக்கு (பரிணாமம்)<br>• முகாமைத்துவத்தின் அலுவல்கள் (திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், பதவிப்படுத்தல், இயக்குதல், ஊக்குவித்தல், தொடர்பாடல், கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடு செய்தல் என்ற ரீதியில்)<br>• முகாமைத்துவத்தின் அண்மைக்கால வளர்ச்சி<br>• முகாமைத்துவ நுட்பங்கள் |
| **வினாப் பத்திரம் 03**<br>ஆங்கில மொழி | 1½ மணித்தியாலம் | கீழ் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்பதாரிகளின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம் /மெமோ (MEMO) பத்திரம்/குறிப்பெழுதும் ஆற்றல்<br>• சிங்களம்/தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல். |

**உதவிக் கணக்காளர் /உதவி நிதிப் பொறுப்பாளர் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

| *வினாப் பத்திரம்* | *காலம்* | *விபரம்* |
|---|---|---|
| **வினாப் பத்திரம் 01**<br>நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 1 ½ மணித்தியாலம் | விண்ணப்பதாரிகளின் தர்க்க ரீதியிலான புரிதல் மற்றும் பகுப்பாய்வுத் திறன் மற்றும் அனுமானிக்கும் (ஊகிக்கும்) ஆற்றல் சம்பந்தமாக மதிப்பீடு செய்வ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வினாப் பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| **வினாப் பத்திரம் 03**<br>ஆங்கில மொழி | 1 ½ மணித்தியாலம் | கீழ் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்ப தாரிகளின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம் / மெமோ (MEMO) பத்திரம் / குறிப் பெழுதும் ஆற்றல்<br>சிங்களம்/ தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| **வினாப் பத்திரம் 04**<br>கணக்கியல் மற்றும் நிதி | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• இறுதிக் கணக்கை தயாரித்தல்<br>• வங்கிக் கணக்கிணக்கக் கூற்று<br>• இருப்புக்கள் பற்றிய மெய்மையாய்வு<br>• கொள்வனவு (பெறுகை) நடைமுறை<br>• காசுப் பாய்ச்சல் கூற்று<br>• கணக்காய்வுச் செயற்பாடுகள் |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை**
**உதவிச் செயலாளர்/உதவிப் பதிவாளர் (வெளிவாரியான பிரிவு)**

| | | |
|---|---|---|
| 1. | ஆகக்குறைந்த தேவையைப் பார்க்கிலும் உயர் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | 20% |
| 2. | தொடர்புடைய துறையில் பயிற்சி | 10% |
| 3. | தொடர்புடைய அனுபவம் | 10% |
| 4. | நேர்முகப் பரீட்சைத் திறன்கள் | 40% |
| 5. | இணை பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் ஆளுமை | 10% |
| 6. | பெயரிடப்பட்ட மத்தியஸ்தரின் அறிக்கை | 10% |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை**
**உதவிக் கணக்காளர்/உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி (வெளிவாரியான பிரிவு)**

| | | |
|---|---|---|
| 1. | ஆகக்குறைந்த தேவையைப் பார்க்கிலும் உயர் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | 20% |
| 2. | தொடர்புடைய துறையில் பயிற்சி | 10% |
| 3. | தொடர்புடைய அனுபவம் | 10% |
| 4. | நேர்முகப் பரீட்சைத் திறன்கள் | 40% |
| 5. | இணை பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் ஆளுமை | 10% |
| 6. | பெயரிடப்பட்ட மத்தியஸ்தரின் அறிக்கை | 10% |

**அறிவித்தலை பிரசுரித்தல்**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பதங்களிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது இணக்கமின்மை இருப்பதாக உணரப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2025.05.30

05-231

## நீதிச்சேவை ஆணைக்குழு

### அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2025 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்ற தாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

**2. சேவை நிபந்தனைகள்:**

2.1 அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப்படுகின்ற நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் சேவை உத்தியோகத்தர்கள் தாபனவிதிக் கோவைக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கும், பணிப்புக்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ் படிதல் வேண்டும்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும்/அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதற்கேற்ப நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்ட 456 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய இரண்டாம் நிலைப்படி பதவியில் இணைந்து 3 வருடத்தினுள் மற்றைய அரசமொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய அட்டவணைப் படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு அமைய சம்பள முறைமை பின்வருமாறு வழங்கப்படும்.

**சம்பளக் குறியீடு – (MN 2-2025)**
சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூ. 48,470.00 – 10 x 540 – 11 x 630 – 10 x 1010 – 10 x 1190 - ரூ. 82,800.00

நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களிற்கு ரூ. 48,470.00 - ஆரம்ப சம்பளமாக நிறுவப்பட்டு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் அட்டவணை III இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்குரியது.

ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் அவர்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசு மற்றும் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அவர்கள் கீழ் படிதல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 30.05.2025 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 32 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழி/ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுக்கு மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்) பரீட்சையின் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்;.)

III. ஏனைய சர்வதேச மொழிகளில் கொண்டிருக்கும் அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்

(உ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு – சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்.**

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | *வினாப்பத்திரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | மொழிபெயர்ப்பு | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு மொழிபெயர்ப்பு பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே 'மொழித்திறன்' மற்றும் 'உளச்சார்பு' வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பிற்காக தாம் விண்ணப்பித்த மொழிக்கு அமைய வினாப்பத்திரத்தை தெரிவு செய்ய வேண்டும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| | *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | மொழித் திறன் | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம்; ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரமானது பரீட்சார்த்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்ட தாக அமையும். |
| 03 | மொழிபெயர்ப்பு | சிங்களம்/ஆங்கில மொழிக்கு<br>ஆங்கிலம்/சிங்கள மொழிக்கு<br>சிங்களம்/தமிழ் மொழிக்கு<br>தமிழ்/சிங்கள மொழிக்கு<br>தமிழ்/ ஆங்கில மொழிக்கு<br>ஆங்கிலம்/தமிழ் மொழிக்கு |

**குறிப்பு** : அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும்/ அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள் :** நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

**8. பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம் :** பரீட்சைக் கட்டணம் ரூ. 400 ஆகும். இக்கட்டணத்தை 'நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்' பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை –**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் 'செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் 'அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025' என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. **பரீட்சைக்கு தோற்றல்** - விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும்.

மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்** - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு –** விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ்.சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2025, மே மாதம் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)(சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி:
சிங்களம் -1
தமிழ் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. விண்ணப்பிக்கும் உரைபெயர்ப்பாளர் பதவி:

சிங்களம்/தமிழ் ☐

சிங்களம்/ஆங்கிலம் ☐

தமிழ்/ஆங்கிலம் ☐

(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

03. பிரத்தியேக தகவல்கள் :

3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/திருமதி/செல்வி ........................................................................ ............................
..............................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : A.P.K.SRIWARDANA

3.2 முழுப்பெயர் : ..............................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

3.3 முழுப்பெயர் : ..............................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

3.4 பிரத்தியேக முகவரி : ..........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

3.5 வசிக்கும் மாவட்டம் : ..........................................................................................................

3.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) : ..................
..............................................................................................................................

3.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.8 பிறந்த திகதி : ......................................

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

3.9 30.05.2025 திகதிக்கு வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

3.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

3.12 தொலைபேசி இலக்கம் :
நிலையானது : ......................... கையடக்க தொலைபேசி : ........................

மின்னஞ்சல் : ..........................

04. கல்வித் தகைமைகள் :

4.1 க.பொ.த.(சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்:
(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :
(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 ஏனைய சர்வதேச மொழிகளில் கொண்டிருக்கும் தகைமைகள்

| *சர்வதேச மொழி* | *தகைமை* | *தகைமையினை பெற்றுக் கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

05. வேறு தகைமைகள் : ..............................................................................................................
.........................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்)

ஆம் ☐ இல்லை ☐

'ஆம்' எனின் விபரங்களை குறிப்பிடுக. ..........................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :
பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................
பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................
செலுத்திய பணம் : ...................................

08. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.
(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமை யற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.
(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.
(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..................... ......................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : ......................................................
முகவரி : ...................................................
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை(தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)**

இந் ....................... சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி .......................... என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்)(தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் ............................ பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 30.05.2025 ஆந் திகதிக்கு 32 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் ...........................ஆம் திகதி கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : .............................. திணைக்களத் தலைவரின் கையொப்பம் :-
உத்தியோகபூர்வ முத்திரை :-

05-239

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவிப் பரிசோதகர் தொழில்நுட்பத்திற்கு உட்படாத சேவைப் பிரிவின் போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

இலங்கைச் புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவிப் பரிசோதகர் தொழில்நுட்பத்திற்கு உட்படாத சேவைப் பிரிவுக்குரிய போதனாசிரியர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப் பரீட்சையின் மூலம் போதனாசிரியர் தரம் III இற்கான ஆட்சேர்ப்பானது மேற்கொள்ளப்படுகின்றது.

**எழுத்துப் பரீட்சை-** இப் பரீட்சையானது பின்வரும் இரண்டு (02) வினாத் தாள்களைக் கொண்டிருக்கும்.

1. பொது அறிவுப் பரீட்சை.-
2. நுண்ணறிவுப் பரீட்சை.-

02. நியமிக்கப்படவுள்ள நபர்களின் எண்ணிக்கை 08 ஆகும். இறுதி வெற்றிட எண்ணிக்கைக்கு அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றுக்கு சமமான புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் வெற்றிட எண்ணிக்கையை விஞ்சி காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பிலான தீர்மானம் நடைமுறை கோவையின் 80 ஆவது பந்தியின் பிரகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

03. **சேவை நிபந்தனைகள்:-**

3.1 அரசாங்க சேவையின் நியமங்கள் நிர்வகிக்கப்படுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. PSC/ EST/ 04-01-43/ 02/ 2016 மற்றும் 2017.09.12 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்பமற்ற சேவை பிரிவிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் , அத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இன்னகத்து செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கும் , தாபன விதிக் கோவையில் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/ 29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தாபன நடைமுறை விதிக்கோவையின் எற்பாடுகளுக்கும் திணைக்கள கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்களின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இச் சேவையில் IIIஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது, (ஓய்வூதியம் முறைமை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கைமயமான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்.)

3.3 இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் போதனாசிரியர் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகள் கழியும் முன்னர் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.

3.4 **அரசகரும மொழிகள்**

**அரச கரும மொழி-** அரசகரும மொழி அல்லாத மொழி மூலத்தின் ஊடாக சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்களினால் உரிய அரச கரும மொழியில் தேர்ச்சியினை தகுதிகூர்காண் காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**ஏனைய அரசகரும மொழி-** பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேரான சுற்றறிக்கைகளின் படி ஏற்புடைய மட்டத்தில் தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.5 நியமிக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும் / அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற மேற்கூறப்பட்டவைகளின் ஏதேனும் ஒன்றினை கருத்திற் கொண்டு பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்து செய்வதற்கு புகையிரத பொது முகாமையாளருக்கு அதிகாரம் உண்டு.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**:- 2025.03.25 ஆம் திகதியுடைய இல.10/2025 உடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் உப அட்டவணை 01 இற்கமைய இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் ரூ.52.250- 10x800-11x 1190 - 10 x1320 - 10x1350 - ரூபா 100,040 (MN-3-2025) ஆகும். உங்களுக்கு அச்சுற்றிக்கையின ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தருக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

05. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்**:

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நன்னடத்தையைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.
(iii) அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவையான ஏனைய எல்லா வகையிலும் உடற்சார் மற்றும் உளச்சார் தகைமைகளைக் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்விசார் தகைமைகள்** :
சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏதேனும் வேறு இரு பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்கள் ஒரே அமர்வில் க.பொ.த. (சா./தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா./தர) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையினை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.(பழைய பாட விதப்புரையின் கீழ் 03 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் போதுமானது)

(இ) **தொழில்சார் தகைமைகள் :**
தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா மூன்றாம் மற்றும் தொழில்முறை கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டவாறு தேசிய தொழில் முறைத்திறமை (NVQ) (05) அல்லது (06) மட்டத்தில் இயந்திரம், மின் மற்றும் மெக்காட்ரொனிக் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியினை கற்றிருத்தல்

(ஈ) **அனுபவம் :**
குறித்த சேவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடம் கற்பித்தல் அல்லது நடைமுறை ரீதியான அனுபவம் என்பன விசேட தகுதியாக கருதப்படும்.

பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான மேற்கூறப்பட்ட அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் அல்லது வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(உ) **வயது** : குறைந்தபட்ச எல்லை - 18 வயதுக்கு குறையாத
ஆகக்கூடிய எல்லை - 45 வயதினை விஞ்சாத

06. **ஆட்சேர்ப்பு முறை** :

06.1 எழுத்து மூலப் பரீட்சை

06.2 கீழ்வரும் பாடங்களை கொண்டமைந்த 02 வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச புள்ளிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| *பாடம்* | *புள்ளிகளின் எண்ணிக்கை* | *காலம்* | *தேர்ச்சிப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. பொது அறிவு | 100 | 01 மணித்தியாலயம் | 40 |
| 02. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 01 மணித்தியாலயம் | 40 |

விண்ணப்பதாரிகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

6.1.1 எழுத்து மூலப் பரீட்சைக்கான பாட விதந்துரை

| *புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான விடயங்கள்* | *கருத்திற்கொள்ளப்படும் உப விடயங்கள்* | *அதிக்கூடிய புள்ளி* |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | டிப்ளோமா/ பட்டப்படிப்பு/பிந்தையப் பட்டப்படிப்பு/வேறு கற்கைநெறிகள் | 10 புள்ளிகள் |
| அனுபவம் | குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் நிறுவனமொன்றில் இரண்டு வருடம் படிப்பித்தல் மற்றும்/ அல்லது நடைமுறை அனுபவத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்டுள்ள படிப்பித்தல் மற்றும் அனுபவம் தொடர்பில் ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய வகையில் 08 வருடங்கள் | 40 புள்ளிகள் |
| ஆங்கிலக் கல்வியறிவு மற்றும் கணினிக் கல்வியறிவு | ஆங்கில மொழியிலான பயன்படுத்தும் திறமை மற்றும்/ அல்லது ஆங்கில மொழி கற்கைநெறி - 05 புள்ளிகள் | 05 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக் காட்டப்பட்ட திறமைகள் | ஆளுமை மற்றும் நேர்முக பரீட்சைக்கு தோற்றமளிக்கும் விதம் | 05 புள்ளிகள் |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | தொழிலுக்கு ஏற்புடைய வகையில் கற்றுள்ள மேலதிக தொழில்சார் கற்கை நெறிகள் மற்றும் பயிற்சிகள் | 10 புள்ளிகள் |

01. **பொது அறிவு** : பொருளாதார, சமூக, அரசியல் பூகோளவியல் மற்றும் விஞ்ஞான விடயங்கள் தொடர்பிலான தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விண்ணப்பதாரியின் பொது அறிவினை பரீட்சிப்பது தொடர்பிலான பரீட்சையாகும்.

02. **நுண்ணறிவுப் பரீட்சை** - வாத திறமை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் திறமை மற்றும் கணிதத் தொடர்பிலான திறமை என்பன பரீட்சிக்கப்படும்.

6.2 **தகைமையை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சை** :

இவ் அறிவித்தலில் 6.1 பந்திக்கமைய எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றி தேர்ச்சிப் பெறும் விண்ணப்பதாரிகளில் மிகச் சிறந்த திறமைகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்குக்கு சமமான விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு தகைமைகள் மதிப்பீட்டும் நேர்முக பரீட்சைக்கு ஈடுபடுத்தப்படுவர். காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

புகையிரத பொது முகாமையாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முக பரீட்சை குழாத்தினால் விண்ணப்பதாரிகளின் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதில் பெற்றுக் கொள்ள வேண்டிய அதிக்கூடிய புள்ளி நூறாகும். (100)

| புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிதான துறைகள் | அதிக்கூடிய புள்ளி |
|---|---|
| மேலதிகக் கல்விசார் தகைமைகள் | 10 |
| அனுபவங்கள் | 40 |
| ஆங்கில மொழிதேர்ச்சி மற்றும் கணினி அறிவு | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப்பட்ட திறமைகள் | 05 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 10 |
| தொழில்சார் பரீட்சைகள் | 25 |
| மொத்தம் | 100 |

6.3 **அதில் புள்ளி வழங்கப்படும் நடைமுறைகோவையின் முழு விபரம் கீழ்வருமாறு** :

கருத்தரங்கில் பெற்றுக்கொண்ட அறிவினை பரீட்சிப்பதற்காக நடைபெறும் பரீட்சை

| *புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான விடயங்கள்* | *வழங்கப்படுகின்ற புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்கு எடுக்கப்படவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 1. கருத்தரங்கில் கூறப்பட்ட தலைப்புக்களை ஒழுங்குபடுத்தல் | 07 புள்ளிகள் | 10 புள்ளிகள் |
| 2. முன் வைத்தல் | 18 புள்ளிகள் | |
| I. அணுகல் | 03 புள்ளிகள் | |
| II. கருத்தரங்கின் திட்டமிடல் விடயங்களை சுருக்கமாக முன்வைத்தல் | 03 புள்ளிகள் | |
| III. முன்வைத்தல் முறைமை | 05 புள்ளிகள் | |
| IV. விடய விளக்கம் | 04 புள்ளிகள் | |
| V. நேர முகாமைத்துவம் | 03 புள்ளிகள் | |

கவனிக்கப்பட வேண்டியவை - நேர்முக பரீட்சைக்கு தோற்றுதல் நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ளதாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.4 பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர் பட்டியல் புகையிரத திணைக்கள இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

07. **பரீட்சைக் கட்டணம்**

பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். இக்கட்டணமானது விண்ணப்பங்கள் ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல. 176-100129027-313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்க மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

08. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**

(அ) விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து விண்ணப்பப் படிவங்களும் A4 (தட்டச்சு கடதாசியில்) அளவிலான கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி விண்ணப்பத்தில் இலக்கம் 01.0 தொடக்கம் 2.11 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 3.0 தொடக்கம் 5.0 வரையிலானவை இரண்டாம் பக்கத்திலும் 6.0 தொடக்கம் 7.0 வரையான தலைப்புக்கள் அதன் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கனிக்கவும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப்படலாம்.

(ஆ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே தமது கையெழுத்திலேயே விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும். விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும். அவ்வாறே விண்ணப்பத்தில் உள்ளடங்கும் மாதிரி விண்ணப்பப்பப் படிவத்திற்கமைய அல்லாத மற்றும் பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்ததா என்பதையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பப் பத்திரம் சரியாக நிரப்பப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதன் விபரத்தினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் மீண்டும்

கவனத்திற் கொள்ளல் வேண்டும். மேலும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நகற்பிரதியை தம் வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(இ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2025.05.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையில் இடது பக்க மூலையின் மேல் இலங்கை புகையிரத திணைக்களத்தில் போதனாசிரியர் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை 2025 என குறிப்பிடப்பட வேண்டும். திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
நியமனக் கிளை,
த. பெ. 355, ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு 10.

(ஈ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது ரூபா 746,760.00 வினை விஞ்சிய வருடாந்த அடிப்படை சம்பளத்தினை பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(உ) அனைத்து வகையிலும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பமொன்று தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே அதைப்பற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை புகையிரத திணைக்களத்தின் இணையத்தளத்தில் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரியாயின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகத்தின் நியமன கிளைக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு உசாவுகையில் விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சை, விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவரெனின் அவ்விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியொன்றினை அனுப்பி வைக்கக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை 011-2446490 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு புகையிரத திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும். மேலும் புகையிரத திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனுமொரு தகவலினை உறுதிபடுத்துவதற்கு நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை, பரீட்சை கட்டணத்தினை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியினை மற்றும் விண்ணப்பத்தை தபாலிடுகையில் பதிவு செய்த பற்றுச்சீட்டினை தயாராக தம் வசம் வைத்திருப்பது பயன் தரும்.

09. பரீட்சைக்கு பிரவேசித்தல்

(அ) விண்ணப்பம் கோரல், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோலின் அடிப்படையில் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் முறையாக பரீட்சை கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு புகையிரத பொதுமுகாமையாளரினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் வழங்கப்படும். தமது பரீட்சை நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரிகள் தமக்கென குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய நுழைவுச்சீட்டில்

கையொப்பத்தினை உறுதி செய்துக்கொண்டு அப் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாள் அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைக் கோவையொன்று இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

(இ) கையொப்பத்தினைஉறுதிசெய்தல்,விண்ணப்பத்திலும்பரீட்சைக்கானவினாத்தாளிலும்விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அல்லது பதவிக்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதக் கூடாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்** :

பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை நிலையாதிபதி திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்வரும் ஏதேனுமொரு ஆவணத்தை முன்வைக்க முடியும்.

(அ) ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்** :

விண்ணப்பங்களை நிரப்புகையில் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சைக்கு ஏற்புடைய விதிகளுக்கமைய எவரேனும் விண்ணப்பதாரியொருவர் அதற்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதன் பின்னர் அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படலாம்.

12. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படுமிடத்து அது தொடர்பிலான இறுதி தீர்மானம் புகையிரத பொதுமுகாமையாளரால் மேற்கொள்ளப்படும்.

13. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம்** :

(அ) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

**குறிப்பு** - (1) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும்.

(2) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. இவ் அறிவித்தலானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற அல்லது இணங்காத தன்மை காணப்படின், அச் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொறியியலாளர் ஜே. ஐ. டீ. ஜயசுந்தர,
புகையிரத பொது முகாமையாளர்.

இலங்கைப் புகையிரத திணைக்களம்,
இல. 355, ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு 10,
2025, மே மாதம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

**இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவிப் பரிசோதகர் தொழில்நுட்பத்திற்கு உட்படாத சேவை பிரிவில் போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

1.0 **மொழி மூலம்**
பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
(ஏற்புடைய எண்ணை கூட்டினுள் எழுதுக) விண்ணப்பமானது பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழிமூலத்திலேயே நிரப்பப்பட வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :...........................................................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANE)

2.2 இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னாலும் வருமாறு பெயர் :
.........................................................................................................................
(உதாரணம் : GUNAWARDHANE, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...........................................................................................................

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (பரீட்சை அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) : ...........................................................................................................................................................

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :...........................................................................................................

2.6 பெண்பால்/ ஆண்பால் :
ஆண்பால் - 0 ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக
பெண்பால் -1

2.7 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.8 திருமணமானவர்/திருமணமாகாதவர் : திருமணமாகாதவர் - 1 ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக
திருமணமானவர் - 2

2.9 இனம் : (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, பிற-5)
ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக

2.10 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

2.11 தகுதிகளை நிறைவு செய்திருக்க வேண்டிய திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

2.12 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.0 தகைமைகள் :

3.1 கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா./ த.) : ஆண்டு :.............................. பரீட்சை :...........................

| | பாடம் | சித்திகள் |
|---|---|---|
| 01. | .................................... | ............................ |
| 02. | .................................... | ............................ |
| 03. | .................................... | ............................ |
| 04. | .................................... | ............................ |
| 05. | .................................... | ............................ |
| 06. | .................................... | ............................ |
| 07. | .................................... | ............................ |
| 08. | .................................... | ............................ |
| 09. | .................................... | ............................ |
| 10. | .................................... | ............................ |

க. பொ. த. (உயர்தரம்) : ஆண்டு :.............................. பரீட்சை :...........................

| | பாடம் | சித்திகள் |
|---|---|---|
| 01. | .................................... | ............................ |
| 02. | .................................... | ............................ |
| 03. | .................................... | ............................ |
| 04. | .................................... | ............................ |

3.2 தொழில்சார் தகைமைகள் : ......................................................................................................................................
......................................................................................................................................................................

3.3 அனுபவம்:
......................................................................................................................................................................
......................................................................................................................................................................

4.0 பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :
பரீட்சைக் கட்டணம் -

(i) செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை ..................................
(ii) செலுத்திய தொகை ..................................
(iii) செலுத்திய திகதி ..................................

| |
|---|
| பற்றுச்சீட்டின் (மூலப்பிரதியை) கழறாத வண்ணம் அதன் ஓர் ஓரத்தை இங்கே ஒட்டவும்<br>பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்ளவும்.) |

5.0 விண்ணப்பதாரியின் உறுதிமொழி :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையிலும் விசுவாசிக்கின்ற வகையிலும் உண்மையானவை எனவும் தெரிவித்துக் கொள்வதோடு பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்ட .................................. திகதிய காசு வைப்புச் சீட்டு இதனுடன் ஒட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். பரீட்சை விதிமுறைகளுக்கு ஒழுகி செயற்படவும் இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய நான் தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நிகழ்கையில் அல்லது அதன் பிறகு எனது பரீட்சை எதிர்பார்க்கை இரத்து செய்யப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் புகையிரதப் பொது முகாமையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்பட்டவன் என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..............

6.0 கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு. ........................................ அவர்களை (முழுப்பெயர்) தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் என்றும் குறித்த பரீட்சைக்குரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும் அவர் ........................................ ஆந் திகதி என் முன்னால் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :..............

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :..................
பதவி :..................
முகவரி :..................
(உத்தியோகபூர்வ இலச்சினை)

7.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரச உள்ளூராட்சி/ அரச கூட்டுத்தாபன சேவைகளில் கடமை புரியும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................... அவர்கள் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................. ஆக சேவை புரிவதோடு அவரின் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இப்பதவிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

.............................
நிறுவன தலைவரின் கையொப்பம்.

திகதி :..............

பெயர் :.....................
பதவிப்பெயர் :.....................
திகதி :.....................
(உத்தியோகபூர்வ இலச்சினை)

05-228

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*